(2) நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு அறிமுகம் (1978–79).

(3) 1977–78 ஆம் ஆண்டுக்கான இறுதித் துணை மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு.

நிதி ஒதுக்க சட்டமுன்வடிவு அறிமுகம்.

(4) 1970–71 ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு.

நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு அறிமுகம்.

29—3—1978 புதன்கிழமை } நிதி ஒதுக்க சட்டமுன்வடிவுகள் மீது விவாதமும் அவற்றை நிறைவேற்றலும்.

30—3—1978 வியாழக்கிழமை } அரசியலமைப்பு (44-வது திருத்த) சட்டமுன்வடிவிற்கு ஏற்பளிப்பது குறித்த தீர்மானம்.

பேரவை 5—4—1978 வரை கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பேரவையின் மற்ற அலுவல்கள் குறித்து பின்னர் அறிவிக்கப்பெறும்.

பேரவை வழக்கம்போல் காலை 9 மணி முதல் பிற்பகல் 1–30 மணி வரை கூடும்.

(முற்பகல் 10–20)

2. தகவல் கோரல்— தொடர்ச்சி.

(ஆ) புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் விவசாயிகளுக்குச் சலுகை குறித்து.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று மதிப்பிற்குரிய நிதியமைச்சர் அவர்கள் வரவு-செலவுத் திட்டத்திற்குப் பதில் அளிக்கிற நேரத்தில் புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அனுவாரியாக விளைச்சல் 37 காசுகள் அதற்குக் கீழே இருந்தால் அவர்களுக்குச் சலுகை அளிக்கக்கூடிய முறையை அறிவித்தார்கள். இன்றைக்கு இந்த அவையில் விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் 25 சதமானம் அதற்குக் குறைவாக விளைச்சல் உள்ள விவசாயிகளுக்குச் சலுகை என்று சொன்னார்கள். நேற்றைய தினம் நிதி அமைச்சர் அவர்

[திரு கூத்தக்குடி ச. சண்முகம்]
கள் அறிவித்த சலுகை பத்திரிகையில் வந்திருக்கிறது. ஆகவே, சலுகை 25 சதமானத்திற்குக் கீழ் விளைச்சல் உள்ளவர்களுக்கா அல்லது அணுவாரி விளைச்சல் 37 பைசாவுக்குக் குறைவாக இருப்பவர்களுக்கா என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : நேற்றைக்கு நிதிநிலை அறிக்கையின்போது நான் அளித்த பதிலில் இந்தச் சபைக்குத் தெரிவித்த சலுகைதான் நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டிய சலுகை என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) இஸ்மாயில் கமிஷன் அறிக்கை மீது விவாதம் குறித்து.

திரு. க. சுப்பு : நிகழ்ச்சி நிரல் பற்றி வாசித்தீர்கள். ஏற்கனவே, இஸ்மாயில் கமிஷன் அறிக்கையைப் பற்றி விவாதிக்க வேண்டுமென்று நான் அறிவிப்புக் கொடுத்திருக்கிறேன். அது இடம் பெறவில்லையே.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கனவே அதுபற்றி அரசு ஆய்வு செய்து எல்லாக் கட்சித் தலைவர்களும் சேர்ந்து முடிவு செய்து 5—4—78 அன்று விவாதிக்கப்பட இருக்கிறது. அதற்கான அறிவிப்பு பின்னால் அறிவிக்கப்பட இருக்கும் நிகழ்ச்சி நிரலில் வரும்.

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் விதி 82-ன் கீழ் ஓர் அறிக்கை அளிப்பார்கள்.

அமைச்சரின் அறிக்கை.

6. மின் உற்பத்தி மீது விதித்துள்ள ஆயத் தீர்வையை மறுபரிசீலனை செய்து திரும்பப் பெறக் கோரி மாண்புமிகு முதலமைச்சர் இந்திய பிரதமருக்கு, அனுப்பிய தந்தி குறித்து பொதுப்பணித்துறை அமைச்சர் அளித்த அறிக்கை.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே மத்திய அரசு வரவு செலவுத் திட்டத்தில் மின் உற்பத்தி மீது யூனிட் ஒன்றுக்கு 2-பைசா வீதம் ஆயத்தீர்வை விதித்துள்ளதை இந்த அவை அறியும். இது மின்வாரியத்தின் தற்போதைய நிதி நிலை பற்றுக்குறையை மேலும் அதிகமாக்குவதுடன் மாநில அரசின் நிதிநிலை பற்றுக்குறையை மறைமுகமாகவும் அதிகரிக்க வகை செய்கிறது, மாநிலத்திற்கு கிடைக்கக்கூடிய வருவாய், மத்திய அரசு நிதிக்கு மாற்றப்படுமாதலால், இது மத்திய மாநில அரசிற்கிடையே யுள்ள சுமுகமான நிதிப் பங்கீடு உறவுக்கு உகந்தது அல்ல. இந்நிலையில் முதலமைச்சர் பிரதமருக்கு தந்தி மூலம் கீழ்க்கண்ட எதிர்ப்பு தெரிவித்துள்ளார்;